[1995 நவம்பர் 7

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஒரு பிரச்சினையை இப்போது எடுத்துக் கொள்ள இருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு உறுப்பினர் கொடுத்ததை முதலில் எடுத்துக்கொள்ள இருக்கிறேன். அந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்ட பின்னால் உங்களுடைய பிரச்சினைக்கு நான் வருகிறேன். (குறுக்கீடு) இன்னொரு பிரச்சினையை எடுத்துக்கொள்ள எதிர்க்கட்சித் தலைவரே வாய்ப்பு வழங்காமல் இருக்கக் கூடாதே? (குறுக்கீடு) திருநெல்வேலி அருகில் நடைபெற்றிருக்கிற பதட்டமான சம்பவம் ஒன்றைப் பற்றி இங்கே எழுப்ப அனுமதி கோரி இருக்கிறார்கள். அதை இப்போது எடுத்துக் கொள்ள இருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அதைத் தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. நான் முன்பே கொடுத்த பிரச்சினை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நேற்று கொடுத்து இருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்த பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டு வந்து, நான் அவர்களிடத்தில் அறிக்கை கேட்டபோது நீங்கள் கொடுத்த பிரச்சினை பற்றிய எந்தப் புகாரும், எந்தக் காவல் நிலையத்திலேயும் பதியப்படவில்லை என்கிற தகவலைச் சொல்லி இருக்கிறார்கள். அப்படி எந்த அடிப்படையும் இல்லாத ஒன்றை இங்கே நாம் விவாதித்து விவாதப் பொருளாக்க முடியுமா? எனவே இன்னொரு பிரச்சினையை எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : புகார் தாக்கலாகாத காரணத்தால் சம்பவம் நடைபெறவில்லை என்று சொல்ல முடியாது.

1995 நவம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புப் பிரச்சினையாக இங்கே விவாதத்திற்குக் கொண்டு வருவதாக இருந்தால் குறைந்தது ஏதாவது ஒரு காவல் நிலையத்திலாவது நீங்கள் தெரிவித்திருக்கிற அந்தப் புகார் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? (குறுக்கீடு) எந்த அடிப்படையில் இங்கே விவாதத்தைக் கிளப்ப முடியும்? (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியிலேயிருந்து என்ன கேள்வி கேட்கிறார்களோ அதற்கு பொறுப்பான பதிலைச் சொல்ல வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. எனவே, ஏற்கனவே அரசாங்கத்தினுடைய கவனத்தில் இல்லாத ஒன்றை அல்லது இந்தச் சம்பவம் நடந்ததா, இல்லையா என்ற சந்தேகத்திற்குரிய ஒன்றை இவர்கள் இங்கே கிளப்புகிறபோது, அரசாங்கத்திற்கு அதன் சார்பாக முறையான அறிக்கையைக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல ஏற்கனவே இதைப்பற்றி எந்தப் புகாரும் அரசாங்கத்திற்கு நேரிடையாகவோ அல்லது காவல் துறைக்கோ வரவில்லை. அப்படி வராத ஒன்றைப்பற்றி எப்படி அரசாங்கம் அதற்கான விளக்கத்தைக் கொடுக்க முடியும் என்பது எங்களுக்கு புரியவில்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கம் பதில் சொல்வது என்றால் ஏதோ ஒரு வகையில் ஒரு புகார் இருந்தால் தானே அரசாங்கம் பதில் சொல்ல முடியும்? (குறுக்கீடுகள்)

திரு. இளம்வழுதி : நாங்கள் சொல்வதுதான் புகார்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு முறை அரசாங்கத்திலே இல்லை. எங்காவது வீதியிலே சொல்வதைப் புகாராக எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) அவர்கள் எழுதிக் கொடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புகாரே வராமல் எப்படி அதை எடுத்துக்கொள்ள முடியும்? (குறுக்கீடுகள்) புகாரே கொடுக்காமல் ஒரு பிரச்சினையை இந்த அவையில் எப்படி ஒரு விவாதப் பொருளாக்கி விவாதித்துக் கொண்டிருக்க முடியும் ? உட்காருங்கள் (குறுக்கீடுகள்)

திரு. ச. அழகிரி : தமிழகத்தில் உள்ள பெரிய பத்திரிகையாளர்கள் எல்லாம் கையெழுத்துப்போட்டு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையைப் புகாராக எடுத்துக்கொள்ள முடியாது. பத்திரிகையாளர் மட்டுமல்ல, கடைசியிலே இருக்கிற சாதாரணக் குடிமகன் கூட..... (குறுக்கீடுகள்)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் எதுவும் தொடங்கவே இல்லை. எதுவும் தொடங்காமல் இருக்கிறபோது பாயின்ட் ஆர் ஆர்டர் என்ன? எதுவும் தொடங்காமல் இருக்கிறபோது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் இத்தனை பேர் அனுமதி மீறி எழுந்து நின்று கொண்டிருக்கிறீர்களே, அது தான் பாயின்ட் ஆப் ஆர்டர். அதைத்தான் கிளப்ப வேண்டும். இப்போது இன்னொரு பிரச்சினையை எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும் (குறுக்கீடுகள்) இதைப்பற்றிப் பேசவேண்டும் என்றால், எந்த அடிப்படையில் பேசுவது? (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எங்களுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது. (குறுக்கீடு) எங்களுக்கு இதிலே மிகுந்த அக்கறை இருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர், இதை நீங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வேறு வகையிலேதான் கொண்டு வரவேண்டும். பத்திரிகையாளர்களே, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இந்தச் சம்பவம் நடந்ததற்கு ஏதாவது ஆதாரம் வேண்டும் அல்லவா ? (குறுக்கீடு) அவர்கள் புகார் கொடுத்து இருக்க வேண்டாமா ? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பேரவையில் விவாதிக்கவேண்டும் என்பதைத்தான் என்னாலே அனுமதிக்க முடியாது. பத்திரிகையாளர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதிலே எதிர்க்கட்சித் தலைவரைவிட இங்கே இருக்கிற அனைவருக்கும், எல்லோருக்கும் அக்கறை உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) எனவே, இதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் இங்கே அதை விவாதப் பொருளாக ஆக்குவதற்கு ஏதாவது ஒரு அடிப்படை இருக்கவேண்டும். (குறுக்கீடுகள்)

1995 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : வெளியிலேயிருந்து வருகிற யூகங்களை, வெளியிலேயிருந்து வருகிற செய்திகளை வைத்து இங்கே பேச முடியாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, வெளியே இருக்கின்ற யூகங்கள், செய்திகள் அடிப்படையிலே இங்கே விவாதத்தை நடத்துவது என்பது முறையல்ல. 1008 பிரச்சினைகளை பத்திரிகையிலே போடுகிறார்கள். (குறுக்கீடு) 1008 பிரச்சினைகள் பத்திரிகையிலே வருகின்றன ; செய்தித்தாள்களிலே வருகின்றன. அதை வைத்துக் கொண்டு சபையில் விவாதிக்க முடியாது. அதற்கு ஆதாரப்பூர்வமான தகவல்கள் வேண்டும். ஆதாரம் வேண்டும் அதற்கு, (குறுக்கீடுகள்) பத்திரிகையாளர்களிலே சில பேர்களுக்கு காழ்ப்புணர்ச்சி இருக்கிறது. அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு பல பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுகின்றன. (குறுக்கீடு) பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில், பல செய்திகளை வெளியிடுகிறார்கள். அதை எல்லாம் வைத்துக் கொண்டு அவையிலே விவாதிக்க முடியாது. எல்லாப் பத்திரிகைகளும் நியாயமாகச் செயல்படும் என்று சொல்ல முடியாது. அரசியல் அடிப்படையிலே பல பத்திரிகைகள் செயல்படுகின்றன. அவர்கள் வேண்டுமென்றே திரித்து ஒரு செய்தியை வெளியிடுகிறார்கள். (குறுக்கீடுகள்) எல்லாப் பத்திரிகைகளையும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) ஒரு சில பத்திரிகைகள்தான். (குறுக்கீடுகள்) முரசொலியிலே நியாயம் வருமா ? தினகரனில் நியாயம் வருமா ? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினையைக் குறித்து யார் யார் கொடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிவிடுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர், திரு. வே. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி, திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் அரசாங்கத்திற்கு அனுப்பி, அவர்களிடத்திலே விளக்கம் கேட்கிறபோது, அப்படிப்பட்ட சம்பவம் எந்தக் காவல் நிலையத்திலேயும் பதிவு செய்யப்படவில்லை. அப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றதற்கான எந்த அடிப்படை ஆதாரமும் இல்லை என்று எனக்குத் தகவல் தெரிகின்றபோது நான் எப்படி இதைப் பேரவையில் விவாதப் பொருளாகக் கொண்டு வர அனுமதிக்க முடியும் ? (குறுக்கீடுகள்) பாயின்ட் ஆப் ஆர்டர் இதிலே ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) பீட்டர் அல்போன்ஸ், இதிலே ஒன்றும்

பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. (குறுக்கீடு) இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் ? கொடுத்தது அவர்கள், நான் கேட்டு இருக்கிறேன், அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடு) அதை நான் சொல்கிறேன். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் வராது. (குறுக்கீடுகள்) நான் இதை அனுமதிக்காதபோது, இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அடுத்த பிரச்சினையை எழுப்ப அனுமதியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், உங்கள் பிரச்சினையைச் சொல்லிவிட்டீர்கள். நான் அதைவிட முக்கியமான பிரச்சினை என்று ஒன்றைச் சொல்லியிருக்கிறேன். அதை நான் இப்போது எடுத்துக் கொள்கிறேன். எனவே, அந்தப் பிரச்சினைக்குச் செல்ல எனக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

திருநெல்வேலி அருகில் கங்கைகொண்டான், துறையூர், அணைத்தலையூர் பகுதிகளில் இரண்டு சமூகத்தினரிடையே ஏற்பட்ட மோதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலி அருகில், கங்கைகொண்டான், துறையூர், அணைத்தலையூர் ஆகிய பகுதிகளில் இரண்டு சமூகத்தினருக்கு மத்தியிலே சமீபத்திலே ஏற்பட்டு வருகிற மோதல்கள் குறித்துப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். இதுசம்பந்தமாக விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்றும், திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, திரு. பரிதி இளம்வழுதி, திரு. ஜி. பழனிசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் என் கவனத்திற்கு ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

(திரு. சஞ்சய் ராமசாமி, திரு. வே. கண்ணன், திருமதி ஜீனத்சர்புதீன், திரு. இரா. அப்பு நடேசன், திரு. ஆர். சிங்காரம், திரு. கே.கே. சின்னப்பன் ஆகியோர் தவிர காங்கிரஸ் கட்சியின் மற்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. வே. தம்புசாமி வெளிநடப்புச் செய்தார்)

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி வெளிநடப்புச் செய்தார்)

1995 நவம்பர் 7]

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து—தொடர்ச்சி

திரு. வே. தம்புசாமி : தலைவரவர்களே, நான் ஒரு பிரச்சினையைப் பற்றிக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு இந்த ஒரு பிரச்சினையை எடுத்திருக்கிறேன். காமராஜர் மாவட்டப் பிரச்சினையை நாளை எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) உங்கள் பிரச்சினையையும் நாளை எடுத்துக் கொள்வோம்.

4. விதி 110-ன் கீழ் சட்ட அமைச்சரின் அறிக்கை

மதுரையில் உயர்நீதிமன்றப் பிரிவு (Bench) அமைக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-இன் கீழ் மதுரையில் உயர்நீதிமன்ற பெஞ்ச் ஒன்று அமைப்பதற்காக தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பான ஒரு அறிக்கையைப் பேரவைமுன் வைக்க மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி* : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்பது தென் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். மதுரையில் உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தென் மாவட்டங்களிலுள்ள வழக்காடும் பொது மக்களின் நலன்கருதி மதுரையில் உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை நிறுவுவதற்காக 1973-ஆம் ஆண்டிலேயே மைய அரசுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மைய அரசு மாநிலத் தலைநகர் தவிர பிற இடங்களில் உயர்நீதிமன்றக் கிளை அமைப்பது தொடர்பான அனைத்து சாத்தியக் கூறுகளையும் ஆராய, பணியிலிருந்து ஓய்வு பெற்று இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி ஜஸ்வந்து சிங் அவர்களுடைய தலைமையிலே குழு ஒன்றை நியமித்தது. இக்குழு 1984-ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு வருகை தந்தது. தமிழகத்தில் உள்ள கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஏழு தென்